# The Temples Mentioned by Appar

**C. Manimegalai**

*Associate Professor, M.C.S. KasiNadar College of Arts and Science*
*Chennai, Tamil Nadu, India*

***Article History***

**Received:** 10.06.2024

**Accepted:** 20.07.2024

**Published:** 30.08.2024

**Corresponding Author**
C. Manimegalai

**Email Id:**
drcmanimegalairavi@gmail.com

**Citation:**
Manimegalai, C. "The Temples Mentioned by Appar." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. S1, 2024, pp. 33–39.

***Abstract***

*This article titled "The Temples Mentioned by Appar" lists the ThoonganaiMada temples in North Tamil Nadu during the Pallava and Chola periods. These temples were built mostly during the Chola period and are mostly found in Chennai and Tiruvallur regions. The purpose of this article is to collect information about these temples and protect their sovereignty.*

***Keywords: Gajabrushta Temple, ThoonganaiMada Temple, Vimana, Chola Period, Pallava Period***

***References***

1. *Dr. M. Rasamanickanar, Saivism.*
2. *N.D. Logasundaram,Min Tamil Medai.*
3. *P. Pa. Jayasenthilnathan,ThirumuraiThalangal.*
4. *TamilagaSivalayangal, ThirumagalNilayam.*
5. *Mylai Seeni Venkataswamy Aivu Katturaigal, Edited by P. Saravanan.*

# அப்பர் கூறும் ஆலக்கோயில்கள்

*முனைவர் சி. மணிமேகலை*
இணைப்பேராசிரியர்
மு.ஊ.ளு. காசி நாடார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சென்னை

**ஆய்வுச்சுருக்கம்**

*அப்பர் கூறும் ஆலக்கோயில்கள் எனும் தலைப்பில் உள்ள இக்கட்டுரை வட தமிழகத்தில் பல்லவர்கள் மற்றும் சோழர் காலத்தில் அமைந்த தூங்கானைமாடக்கோயில்களை பட்டியலிடுகிறது. "பெரும்பாலும் சோழர் காலத்திலேயே கட்டப்பட்டுள்ள இக்கோயில்கள் சென்னை மற்றும் திருவள்ளுர் பகுதிகளிலேயே அதிகம் காணப்படுகிறது. இக்கோயில்கள் பற்றிய செய்திகளை சேகரித்து அதன் இறையாண்மையை காப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.*

***கலைச்சொற்கள்:*** *கஜபிருஷ்ட கோயில், ஆலக்கோயில், தூங்கானைமாடக்கோயில், விமானம், சோழர் காலம், பல்லவர் காலம்*

**முன்னுரை**

*கடவுளரின் இல்லம் கோயிலாகும். இதன் கட்டமைப்பு மனிதனையும் கடவுளையும் ஒருங்கிணைக்கக்கூடியது. சமய தத்துவங்களையும் கருத்துக்களையும் சின்னங்கள் மூலமாக வெளிப்படுத்தும் வடிவமைப்பில் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஜார்ஜ் மிசெல் கூற்றுப்படி, மாயை சூழ் உலகிலிருந்து ஞானமும் உண்மையுமான உலகிற்கு பயணிக்கத்தூண்டுமாறு கோயில்கள் அமைந்துள்ளன.*

*கோயிலை மனித உடலோடு ஒப்பிட்டு சித்தர்கள் கூறுவர். மனித உடலை திருக்கோவிலாகவும் உள்ளத்தை கருவறை என்றும் கூறுகின்றனர். ஊத்தை உடம்பு ஒன்பது வாசல் என்று சித்தர்கள் மனித உடலை கூறுவது போலவே கோயில்களிலும் ஒன்பது வாசல்கள் அமைக்கப்பட்டு கட்டப்பட்டதாகவும் கூறுவர். இதற்குச் சான்று சிதம்பரம் நடராசர் கோயிலும் மதுரை மீனாட்சியம்மன் கோயிலுமாகும். இதில் குறிப்பாக புருவத்தின் மத்தியப்பகுதியே கருவறையின் வாயிலாகவும் தலையின் உச்சியில் கடவுளின் சிலை இருப்பதாகவும் கருதப்படுகின்றது. கோபுரம்தான் இறைவனின் திருவடிகளாகக் கருதப்படுகின்றது.*

**கோபுரங்கள்**

*பழங்காலங்களில் வெற்றியின் சின்னமாகவோ அல்லது அடையாளமாகவோ கோபுரங்கள் அமைக்கப்பட்டன. மேலும் தண்ணீர் தொட்டி கோபுரங்கள், மணிகூண்டு கோபுரங்கள், கலங்கரை விளக்கங்கள், கோட்டை கோபுரங்கள், என பலவிதங்களில் கோபுரங்கள் பயன்பட்டன. இன்று தொலைதொடர்பு கருவியாகவும் கோபுரங்கள் பயன்படுகின்றன.*

*நாகரம், வேசரம், திராவிடம் என்ற மூன்று வகை இந்தியக் கோயிற்கட்டடப் பிரிவுகளில் திராவிடம் என்பது தென்னிந்திய வகையாகும். கோயிற்கட்டடத்தில் அடி, உடல், தோள், கழுத்து, தலை, முடி என்று ஆறு உறுப்புகள் உண்டு. இதில் தலை அல்லது கூரை என்பதையே கோபுரம் அல்லது விமானம் என்று கூறுகிறோம். தெய்வங்கள் எழுந்தருளியிருக்கும் திருவுண்ணாழிகையை விமானம் அல்லது கோபுரம் என்று அழைக்கின்றனர். "மானம்" என்றால் "அளவு", "விசு" என்றால் "கடந்தது" எனவே அளவு கடந்த தெய்வீக சக்தி கொண்டது விமானம் என்ற பொருளிலேயே இப்பெயர் சுட்டப் பெற்றது. மேலும் கோபுரம் என்ற சொல்லைப் பார்த்தால் "கோ" என்றால் இறைவன் "புரம்"*

*என்றால் ''இருப்பிடம்'' எனவே இறைவனின் இருப்பிடமே கோபுரம் தான் என்பதால் தான் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்ற பழமொழி எழுந்தது போலும்.*

### கோயில் வகைகள்

*அப்பர் தேவாரத்தின் முதல் திருமுறையில் திருக்கடந்தைத் தூங்கானைமாடம் என்றும் மூன்றாம் திருமுறையில் பெண்ணாகடத்துப் பெருந்தூங்கானை மாடம் என்றும் குறிப்பிட்டுச் செல்கிறார். சம்பந்தரும் தன்னுடைய முதல் திருமுறையில் தூங்கானைமாடம் என்று குறிப்பிட்டுச்செல்கிறார். மேலும் அப்பர் தனது திருஅடைவு திருக்காண்டகத்தின் ஐந்தாவது பாடலில்*

***"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோடெட்டு மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே"***

*சோழன் கோச்செங்கணான் கட்டிய எழுபத்தெட்டுக் கோயில்களைக் கூறிய பின்னர் கோயில் வகைகளையும் நமக்கு எடுத்துரைக்கின்றார்.*

### ஆலக்கோயில்

*நாவுக்கரசர் கூறிய வகைகளுள் ஆலக்கோயில் பற்றிய செய்திகளை அலசி ஆராய்வோம். இந்த ஆலக்கோயில் பற்றி பல விதமான கருத்துகள் காணப்படுகின்றன. ஆலக்கோயில் என்பது ஆனைக்கோயில் என்று ஒரு சிலரும் ஆலமரத்தினால் கட்டப்பட்ட கோயில் என்று ஒரு சிலரும் கருதுகின்றனர். மேலும் ஆலம் என்பது நீர் சூழ்ந்த இடத்தைக் குறிக்கும் சொல். ஆதலால் நீர் சூழ்ந்த இடத்தில் உள்ள கோயில்கள் என்றும் கூறுவர். நாவுக்கரசரின் கூற்றுப்படி ஆலக்கோயில் என்பது கோயில் கட்டட வகைகளில் ஒன்றாகும் என்பது தெளிவானது. ஆலக்கோயிற் கட்டடம் என்பது ஆனைக்கோயில் வடிவத்தில் அமைந்து காணப்படும். சிற்பசாஸ்திரங்கள் இதனை கஜபிருஷ்ட கோயில் என்று அழைக்கின்றனர். இதனை ஹஸ்தி பிருஷ்ட கோயில் என்றும் அழைப்பர். கஜபிருஷ்ட அமைப்பிலான கோயில் விமானத்தை தூங்கானை மாடம் என்று கூறலாம்.*

### பல்லவர்கள் மற்றும் சோழர்கள் காலம்

*கூரம் சிவன் கோயில். காஞ்சியில் உள்ள திருகரஅரேசுவரர் கோயில். திருத்தணி வீரட்டாசுவரர் கோயில். மாமல்லபுரத்தில் உள்ள பஞ்சபாண்டவர் ரதம் என தற்பொழுது வழங்கப்பெறும் இடத்தில் உள்ள நகுலன் சகாதேவன் ரதம் போன்றவை பல்லவர் காலத்து நன்னிலையில் உள்ள தூங்கானை மாடக்கோயில்களுக்குச் சான்றாகும். சோழர் காலத்து தூங்கானை மாடக்கோயில்கள் ஏறத்தாழ கிபி 10 ஆம் நூற்றாண்டு முதல் தற்காலம் வரையில் அமைக்கப்பட்டவை ஆகும். பிறகு விஜயநகர அரசர் காலத்திலும் சில தூங்கானைமாடக்கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.*

### திருக்கடந்தைத் தூங்கானைமாடக்கோயில்

*தமிழ்நாட்டிலேயே மிகப்பழமையான தூங்கானைமாடக்கோயில் திருக்கடந்தைத்தூங்கானை மாடக்கோயிலாகும். இது பெண்ணாகடம் என்னும் ஊரில் உள்ளது. இன்று திருவானைக்கா என்று அழைக்கப்படுகிறது. இ.க்கோயிலைக் கட்டியவன் சோழன் கோச்செங்கணான் ஆவான். இக்கோயில் கி.பி 3 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். ஆதன் பிறகு வந்த சோழர்களின் காலத்தில் குறிப்பாக குலோத்துங்க சோழன் 108 கஜ பிருஷ்ட விமானக் கோயில்களைக் கட்டினான் என்று கூறப்படுகிறது. அவை பற்றிய முழுமையான தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை ஆயினும் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 24 கஜ பிருஷ்ட கோயில்கள் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. அவற்றைப் பற்றி இனி காண்போம்.*

**1. இராமநாதபுரம் ஸ்ரீ அகத்தீஸ்வரர் திருக்கோயில்:**

*சென்னை பெரியபாளையம் திண்ணனூர் பாதையில் உள்ளது பாக்கம். அந்தத் தலத்திலிருந்து அருகே உள்ள ஆலத்தூர் அருகே உள்ளது இச்சிவன் கோயில்.*

**2. களாம்பாக்கம் ஸ்ரீ திருநாகேஸ்வரர் திருக்கோயில்**

*தண்டலம் பேரம்பாக்கம் தக்கோலம் சாலையில் இக்கோயில் காணப்படுகிறது. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவ மன்னன் முதலாம் பரமேஸ்வரவர்மன் (கிபி: 669-690) கட்டியுள்ளான். முதலாம் இராஜராஜன் காலத்திய கல்வெட்டுகளும் உள்ளன.*

**3. கேசாவரம் ஸ்ரீ கயிலாச ஈஸ்வரமுடைய மகாதேவர் திருக்கோயில்**

*சென்னை பேரம்பாக்கம் சாலையில் பேரம்பாக்கத்தை அடுத்துள்ள ஊரில் உள்ளது இத்திருக்கோயில். இரண்டு அடுக்கு தூங்கானைமாடக் கோயிலாக உள்ள இத்தலத்தில் பெரிய பாணம் கொண்டுள்ள பெருமான் கல்வெட்டில் உள்ள பெயர் கொண்டே அழைக்கப்படுகிறார். வட்ட வடிவத்தினாலான கஜபிருஷ்ட அமைப்பில் மீண்டும் மீண்டும் பார்க்கத்தூண்டும் அற்புதக் கைவண்ணம் கொண்ட கட்டடச்சிறப்பு.*

**4. தொழுர் ஸ்ரீ திருக்கண்டீஸ்வரர் திருக்கோயில்**

*திருவள்ளூரிலிருந்து செவ்வாபேட்டை அருகில் உள்ளது இத்திருக்கோயில் கள்ளிச் செடிகளுக்கு நடுவே கிடைத்ததால் கள்ளீஸ்வரர் என்றும் ராஜராஜன் கண்டெடுத்ததால் திருக்கண்டிஸ்வரர் என்றும் இப்பெருமான் அழைக்கப்படுகிறார். ராஜராஜன் மற்றும் அவன் மனைவியின் சிலை இவ்வாலயத்தில் இருப்பதை வைத்தே அவன் கட்டிய கோயில் என்று கூறப்படுகிறது.*

**5. அரண்வாயல் ஸ்ரீ திருத்தாளீஸ்வரர் திருக்கோயில்**

*சென்னை திருவள்ளூர் நெடுஞ்சாலையில் உள்ளது அரண்வாயல் தலம். ஆகத்தியரால் பாடல் பெற்ற தலமாக இது காணப்படுகிறமு. தாள விருட்சம் என்கிற பனை மரம் தல விருட்சமாக உள்ளதால் திருத்தாளீஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார். 1000 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கஜ பிருஷ்ட விமானம் கொண்டது. கூவம் நதிக்கரையில் உள்ள ஊர். கழுத்தில் உபகிரீவமும் கைகளில் கேயுரம் மற்றம் வளையமும் வஸ்திரமும் புணூல் தரித்த மார்பும் பரிவட்டம் கொண்ட கிரீடம் ஆகியவையும் பல்லவர் காலச் சிற்பம் என்பதை நிலைநாட்டுகிறது.*

**6. புதுவள்ளூர் ஸ்ரீ சச்சிதானந்த ஈஸ்வரர் திருக்கோயில்**

*திருவள்ளூர் திருமழிசை பிரதான சாலைக்கு அருகில் அமைந்துள்ளது இவ்வுர்.அமைதியான சுழலில் அமைந்த சிவாலயம் இது. தல விருட்சமான ஆலமரமும் நந்தவனமும் திருக்குளமும் உள்ள கோயில் ஆகும் கஜ பிருஷ்ட அமைப்பில் கோஷ்ட மூர்த்திகளுடன் அமைந்துள்ளது இத்திருத்தலம்.*

**7. கொரட்டூர் ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் திருக்கோயில்**

*கொரட்டூரில் இக்கோயில் அமைந்துள்ளது. கூவம் நதிக்கரையில் அமைந்த தலம் இது. காகபுஜண்டர் வழிபட்டது. கஜ பிருஷ்ட விமானம் கொண்டது.*

**8. (வட) திருமுல்லைவாயல் ஸ்ரீ மாசிலாமணீஸ்வரர் திருக்கோயில்**

*சென்னை ஆவடியை அடுத்துள்ள திருமுல்லைவாயலில் அக்கோயில் அமைந்துள்ளது. கஜ பிருஷ்ட விமானம் கொண்டது. காஞ்சி மன்னன் தொண்டைமான் கட்டியதாகக் கூறப்படுகிறது.*

**9. திருவேற்காடு வேதபுரீஸ்வரர் திருக்கோயில்**

*சிவபெருமான்திருமணத்தின்போது, உலகத்தின் சமநிலைக்காக வட திசையிலிருந்து தென்திசை நோக்கி திருமணத்தைப் பாராது வந்த அகத்தியருக்கு இத்திருத்தலத்தில் திருமணக்காட்சி கொடுத்தார் என்று கூறப்படுகிறது. இன்றும் கருவறையில் சிவன் பார்வதி திருமண கோலத்தில் உள்ளனர். கஜ பிருஷ்ட அமைப்பு கொண்ட சோழர் கால திருப்பணி. நாயன்மார்களில் ஒருவரான மூர்க்க நாயனார் அவதரித்த திருத்தலம்.*

**10. நூம்பல் ஸ்ரீ அகத்தீஸ்வரர் திருக்கோயில்**

*திருவேற்காடு செல்லும் வழியில் உள்ள வேலப்பன்சாவடியில் உள்ளது இத்திருக்கோயில். மிகப் பழமையான தலம். ஆகத்தியர் வழிபட்ட தலமாகக் கருதப்படுகிறது. மூன்றாம் குலோத்துங்கன் நிறுவிய கஜ பிருஷ்ட அமைப்பு கொண்ட கோயில் இது.*

**11. இடையார்பாக்கம் ஸ்ரீ திருப்பாதகாடுடையார் திருக்கோயில்**

*சென்னை அரக்கோணம் அருகில் உள்ளது. கஜ பிருஷ்ட அமைப்பு. முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் கி.பி. 11ம் நூற்றாண்டில் தூங்காணைமாட அமைப்பில் அமைந்த அருமையான வேலைப்பாடுகள் கொண்ட ஆலயம். இவ்வாலய வடக்கு அடிதளத்தில் ஜெயம் கொண்ட சோழ மண்டலத்து புரிசை நாட்டின் மணவிற் கோட்டத்தில் அமைந்த இத்தலத்தில் இரண்டு விளக்கெரிக்க குலோத்துங்க சோழனின் 38வது ஆண்டு ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்திய நிவந்தமும் அதே ஆண்டில் 95 ஆடுகள் தந்த செய்தியும் கல்வெட்டாக உள்ளன.*

**12. அருங்குளம் ஸ்ரீ அகத்தீஸ்வரர் திருக்கோயில்**

*திருத்தனியிலிருந்து நெமிலி செல்லும் சாலையில் இவ்வுர் உள்ளது. கஜ பிருஷ்ட விமானம். சோழர் காலத் திருப்பணி. நேர்த்தியான தூண்களும் அதன் சிற்பங்களும் மிகப் பழமையான ஆலயம் என்பதை பறைசாற்றுகின்றது.*

**13. சோழவரம் ஸ்ரீ அகத்தீஸ்வரர் திருக்கோயில்**

*செங்குன்றம் தாண்டியதும் காரனோடைக்கு அருகில் உள்ளது இத்திருக்கோயில். அனைத்து கோஷ்ட மூர்த்திகளும் உள்ள பழைமையான திருக்கோயில். கஜ பிருஷ்ட விமானம். சோழர் காலத் திருப்பணி. அகத்தியர் பிரதிஷ்டை செய்ததாகக் கூறப்படுகிறது.*

**14. சோழப்பாளையம் ஸ்ரீ அகத்தீஸ்வரர் திருக்கோயில்**

*சோழவரத்திலிருந்து சுரப்பேடு செல்லும் பாதையில் உள்ளது இவ்வூர். கஜ பிருஷ்ட அமைப்பில் உள்ளது இத்திருக்கோயில். குலோத்துங்க சோழனால் கட்டப்பட்தாகக் கூறப்படுகிறது.*

**15. திருக்கண்டலம் சிவானந்தேஸ்வரர் திருக்கோயில்**

*சென்னை பெரியபாளையம் அருகில் உள்ள கன்னிகைப்பேர் என்னும் ஊருக்கருகில் உள்ளது இத்தலம். கள்ளி மரத்தடியில் இருந்து சுவாமி வெளிப்பட்டதால் திருக்கள்ளீஸ்வரர் என்ற பெயரும் இவருக்குண்டு. அகத்தியருக்கு சோமஸ்கந்த வடிவில் காட்சியளித்து இத்தலத்திற்கு அழைத்துள்ளார். திருக்கல்யாணத்தை காணமுடியவில்லையே என்று வருந்திய அவருக்கு சிவானந்தத்தைக் காட்டிதால் இவருக்கு சிவானந்தேஸ்வரர் என்ற பெயர் அமைந்தது. கஜ பிருஷ்ட அமைப்பில் உள்ளது இத்திருக்கோயில்.*

**16. காட்டூர் ஸ்ரீ திருவாலீஸ்வரர் திருக்கோயில்**

*பொன்னேரி மீஞ்சுர் பாதையில் உள்ளது. வாலி தவமிருந்து புஜித்த தலம். வாலியின் சி லை கூட இங்கே உள்ளது. ஸ்ரீ சந்திர சேகர சரஸ்வதி என்கிற மகா பெரியவர் புஜைகள் நடத்திய தலம். சோழர் கால கஜ பிருஷ்ட அமைப்பில் உள்ளது இத்திருக்கோயில்.*

**17. ஊத்துக்கோட்டை ஸ்ரீ திருநீலகண்டர் திருக்கோயில்**

*சென்னை பெரியபாளையம் அடுத்துள்ள ஊத்துக்கோட்டையில் உள்ளது இத்திருக்கோயில். ஆரணி ஆற்றங்கரையில் உள்ளது. ஆம்பாள் அமர்ந்த கோலத்தில் காணப்படுகின்றாள். இடப்புறம் அகத்திய முனிவர் உள்ளார். கஜ பிருஷ்ட விமானம் அமைந்து காணப்படுகிறது.*

**18. சின்னம்பேடு ஸ்ரீ அகத்தீஸ்வரர் திருக்கோயில்**

*சிறுவாபுரி பகுதியில் அமைந்த திருக்கோயில். சோழர் காலத் திருப்பணி. அகத்தியரால் புஜிக்கப்பட்ட லிங்கம். அர்த்த மண்டபம், மகா மண்டபம், திருமண மண்டபம் மற்றும் சபா மண்டபம் கொண்டு அமைந்துள்ளது. கஜ பிருஷ்ட அமைப்பில் உள்ளது இத்திருக்கோயில்.*

**19. பொன்னேரி ஸ்ரீ அகத்தீஸ்வரர் திருக்கோயில்**

*பொன்னேரியில் அமைந்த இத்திருத்தலம் 2500 ஆண்டுகால பழமையானதாகக் கூறப்படுகிறது. ஆகத்திய மாமுனி வழிபட்ட தலமாகக் கூறப்படுகிறது.. இங்குள்ள திருக்குளம்கூட அகத்திய தீர்த்தம் என்றே அழைக்கப்படுகிறது. கஜ பிருஷ்ட அமைப்பில் உள்ளது இத்திருக்கோயில் சோழர்காலத் திருப்பணி ஆகும். ராஜராஜ சோழன் சிலை இங்கு காணப்படுகிறது. மேலும் ராஜேந்திர சோழன் சிலையும் மும்முடி சோழன் சிலையும் இங்குள்ள தூண்களில் வடிக்கப்பட்டுள்ளன.*

**20. திருப்பாலைவனம் ஸ்ரீ திருப்பாலீஸ்வரர் திருக்கோயில்**

*தேவர்கள் கடைந்த அமிர்தத்தைக் காக்க தானே அமிர்தத்தால் சிவலிங்கம் செய்து வழிபட்ட அகத்தியர் காலத் தலம் என்று கூறப்படுகிறது. வெள்ளை நிற லிங்கம். விக்கிரம சோழனின் 14ம் ஆட்சியாண்டில் தன்மதவாளன் திருமடம் கண்டகோபால மாணிக்க மடம் மற்றும் அன்பர்க்கடியான் மடம் இருந்ததற்கான குறிப்புகள் கிடைத்துள்ளன. அளவை முறை பற்றியும் அவற்றுள் குழி மற்றும் வேலி போன்ற அளவை முறைகள் பற்றியும் குறிப்புகள் கிடைத்துள்ளன. 13ம் நூற்றாண்டில் திருப்பணி செய்யப்பட்ட கல்வெட்டு உள்ளது. கஜ பிருஷ்ட அமைப்பில் உள்ளது*

**21. கருங்காலி நைமிசான்யம் ஸ்ரீ சிந்தாமணீஸ்வரர் திருக்கோயில்**

*பழவேற்காடு அருகில் உள்ளது. சிந்தாமணி நதி அருகே ஓடுகிறது. சிந்தாமணி தலம் பற்றிய தகவல் கல்வெட்டுக் குறிப்பு காணப்படுகிறது. பஞ்சப் பிரம்மத் தலங்களில் சிவனின் அகோர முகத்திற்குரிய தலம். பின்புறம் ஆரணி நதியும் முன்புறம் கடலும் அமைய வனம் சுழ்ந்த இயற்கை வனப்புடன் அமைந்த இத்தலம் 1400 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இது போன்ற தீர்த்த அமைப்பினால் பித்ரு கர்மாக்கள் செய்யப்படும் காசி கயா ராமேஸ்வரத்திற்கு நிகரான தலம் என்று கல்வெட்டுச் செய்திகள் மூலம் அறிய முடிகிறது. 6ம் நூற்றாண்டில் சோழர்களால் கட்டப்பட்டு பிற்காலத்தில் பராந்தக சோழனால் திருப்பணி செய்யப்பட்டது. 18 சித்தர்களில் சட்டை முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சதுரபீட ஆவுடையார் மற்றும் கஜ பிருஷ்ட விமானம் கொண்டது. இப்பெருமான் மீனவர்களின் குலதெய்வமாக வழிபடப்படுகிறார்.*

**22. பொழிச்சலூர் ஸ்ரீ அகத்தீஸ்வரர் திருக்கோயில்**

*சென்னை நவக்கிரகப் பதிகளில் சனி பகவானுக்குரிய தலம். சனீஸ்வரர் சிவனை புஜித்த தலமாகக் கூறப்படுகிறது. சென்னை பல்லாவரத்திற்கு அருகில் உள்ளது இத்தலம். பொழில் சேர் ஊர் என்பதன் திரிபே பொழிச்சலூர் ஆனதாகக் கூறப்படுகிறது. 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கோயில். புகழ்ச்சோழனை வென்றதாலும் காஞ்சியினை கைப்பற்றியதாலும் அதே பெயரைத் தாங்கிய மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சியில் புகழ்ச்சோழ நல்லூர் என்கிற பெயருடன் திகழ்ந்த ஊர். கஜ பிருஷ்ட விமானம் கொண்டது.*

**23. சோமங்கலம் ஸ்ரீ சோமநாதீஸ்வரர் திருக்கோயில்**

*சென்னையை அடுத்த குன்றத்தூர் மற்றும் கோவுர் அருகில் உள்ளது இவ்வூர். முதலாம் குலோத்துங்கனின் மூன்றாவது ஆட்சியாண்டில் (கி.பி.1073) கஜ பிருஷ்ட அமைப்புடன் கட்டி கல்வெட்டின்படி ஜெயங்கொண்ட சோழ மண்டலதது செங்காட்டுக் கோட்டத்து மகனூர் நாட்டுச் சோமங்கலமான ராஜசிகாமணிச்ச துர்வேதிமங்கலமாக இருந்துள்ளது. வேத விற்பன்னர்களுக்கு இறையிலியாக தந்த புண்ணிய பூமி இது. ஏரி உடைப்பு மற்றும் பழுது பார்த்தது, சந்தி விளக்கெரிக்க பசுக்கள் தானம் எனப் பல கல்வெட்டுகள் ஆலயப் பராமரிப்பு முயற்சிகளை விளக்குகின்றன.*

**24. கெருகம்பாக்கம் ஸ்ரீ நீலகண்டேஸ்வரர் திருக்கோயில்**


*கி.பி.1008ல் புலியுர் கோட்டத்து மாங்காடு நாட்டுக் கோவுரைச் சுற்றியுள்ள ஆலயங்களுக்கு கொடுக்கப்பட்டதானங்களில் இவ்வாலயமும் அமைந்து குறுநில மன்னர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்துள்ளது. கஜ பிருஷ்டமும் கோபுரமும் முற்றுப்பெறாத ஆலயமாகப் பல வருடங்கள் இருந்துள்ளன. பல்லவர்களை வென்ற ராஜராஜன் தன் பெயரை நிலைநாட்டிய தலங்களில் ஒன்று. கோவுர் கிழார் தினகரன் வெண்பா என்கிற நூலில் குறிப்பிட்டுள்ள பதிகளில் ஒன்று. சோழர் கால வரலாற்றையும் செங்கல் சுண்ணாம்பு காரை கொண்டு ஒன்றரை அடி கனத்துடன் கட்டிய சுவர்களைப் பார்த்தால் இத்தலம் மிகப்பழமையானது என்று தெரிகிறது.*

**முடிவுரை**

*சோழர்கள் மற்றும் பல்லவர் காலங்களில் கட்டப்பெற்ற கஜ பிருஷ்ட அதாவது தூங்கானை மாட அமைப்பில் அமைந்த விமானங்களும் கோயில்களும் எண்ணிக்கையற்று இருந்திருக்கக்கூடும் சில அழிந்தும் இருக்கலாம். ஆனால் மேற்கூறிய அமைப்பிலான தூங்கானை மாட கோயில்கள் அனைத்தும் சிவபெருமானுக்குரிய திருக்கோயில்களாகவே அமைந்திருந்ததைக் காணமுடிகிறது. மேலும் இவை சென்னை மற்றும் திருவள்ளூர் ஒட்டிய பகுதிகளில் அதிகம் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.*

**கஜ பிருஷ்ட கோயில் மற்றும் விமான அமைப்பு**





**பார்வை நூல்கள்**

1. டாக்டர் மா இராசமாணிக்கனார் - சைவ சமயம்
2. நூ.த. லோகசுந்தரம் - மின் தமிழ் மேடை
3. பு. பா. ஜெயசெந்தில்நாதன் - திருமுறைத் தலங்கள்
4. தமிழகச் சிவாலயங்கள் - திருமகள் நிலையம்
5. மயிலை சீனி வேங்கடசாமி ஆய்வுக் கட்டுரைகள் - தொகுப்பாசிரியர் ப. சரவணன்